மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், ஆலங்குடி தாலூகா

*146 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆலங்குடியில் இருக்கவேண்டிய தாலூகா மாஜிஸ்டிரேட், சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் தலைமை இடமான ஆலங்குடியில் இல்லாது புதுகோட்டையிலே உள்ளதால் அவைகளை ஆலங்குடிக்கு மாற்றிக் கொடுக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No, Sir.

திரு. பி. முருகையன் : இந்த மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் இதற்கு முன்பு பாமக்குடியிலும், ஆலங்குடியிலும் இருந்தது. இப்போது அதை மாற்றி புதுக்கோட்டையில் வைத்திருக்கிறார்கள். தாலூகா தலைநகரமாக இருக்கின்ற ஆலங்குடியில் இப்போது கோர்ட் இல்லாததால், சுற்றுவட்டாரத்திலுள்ள மக்கள் உடனடியாக நீதிமன்றத்திற்கு வந்து தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கோர்ட்டுகளை ஆலங்குடியில் அமைப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது அப்படி உத்தேசம் எதுவுமில்லை. இவ்விதம் மாற்றி அமைக்க வேண்டும் என்று ஏதாவது ரிப்ரசென்டேஷன் அனுப்பினால் அதை ஹைகோர்ட்டுக்கு அனுப்பி அவர்களுடைய உசிதம்போல் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

New Sub-Registry Offices.

*147 *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether Sub-Registry Offices were opened newly during 1963 ; and

(*b*) if so, where?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) & (இ) 1—4—1963-லிருந்து 1963-ம் காலண்டர் ஆண்டில் இம்மாநிலத்தில் அடியிற்கண்ட சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்கள் திறக்கப்பட்டன :—

1. மதகுப்பட்டி (புதுக்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

2. உடங்குடி (பாளையங்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் மவாட்டம்).

3. குள்ளன்சாவடி (சிதம்பரம் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

4. பரூர் (சேலம் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

5. சத்தியமங்கலம் (கடலூர் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).